விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 12.49 p.m
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 12.55 p.m

# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, METTUR

Case No :C.C.No.263/2019

Prosecution side witness : அ.சா.4 Date : 22.01.2025

| | |
|---|---|
| Name : selvam | Taluk : Mettur |
| Father Name : muthusamy | Calling : TNSTC |
| Village : Andikarai | Age : 25 |

(Accused present.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

## முதல் விசாரணை

நான் ஆண்டிக்கரையில் குடியிருக்கிறேன். அரசு போக்குவரத்து கழகத்தில் நேரம் காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த சம்பவத்தைபற்றி எனக்கு எதும் தெரியாது. நான் நேரில் பார்க்கவில்லை. அன்றைய தினம் போக்குவரத்து கழக பணிமனையில் பணியில் இருந்தேன். வேறு ஒன்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

## அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–

27.04.2019 ம் தேதி காலை 10.00 மணியளவில் நான் மேட்டூர் காவல் நிலையத்தில் TSTC time office பக்கத்தில் நின்று கொண்டிருந்தபோது பேருந்து நிலைய போலிஸ் OP நிலைய பின்புறம் தார்ரோட்டில் சத்தம்

கேட்டு நான் போய் பார்த்தேன் என்றும் அங்கு ஆஜர் எதிரி அங்கு நடந்து சென்ற பவானி TNTC பேருந்து ஓட்டுநர் செந்தில்குமார் மற்றும் நடத்துனர் செல்வராஜ் இருவரையும் தடுத்து நிறுத்தி கெட்ட வார்த்தையால் திட்டி, இருவரையும் கைகளால் ஓங்கி அடித்தார் என்றும் செந்தில் குமாருக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டது என்றும் இருவரும் அடிக்க வேண்டாம் என்று சொல்லியும் எதிரி செந்தில்குமாரின் சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளி அருகில் இருந்த ஓட்டல் கடையில் விறகு கட்டை எடுத்து வந்து செந்தில்குமாரின் இடுப்பி பகுதில் அடித்ததாகவும் அதை கேட்ட செல்வராஜ் என்பவரை கெட்ட வார்த்தையால் திட்டி கட்டையால் அவரை அடித்து கொலைமிரட்ட விடுத்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் நான் சம்பவம் இடத்தில் இல்லை. எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u> இல்லை.

<u>விசாரணை முடிக்கப்பட்டது</u>

**ஒம்/– அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**